1975 நவம்பர் 7]

பிரிவு 2, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே,

"தமிழ்நாடு 1975ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/75) திருத்தப்பட்டபடி, நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு, திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஏ) தமிழ்நாடு 1975ஆம் ஆண்டு சட்டமன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/75).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே,

"தமிழ்நாடு 1975ஆம் ஆண்டு சட்ட மன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) திருத்த சட்ட முன்வடிவு* (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 49/1975) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1967 ஆம் ஆண்டு சட்டமன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) (தமிழ்நாடு சட்டம் 3/1967) சட்டத்தைச் சேர்ந்த 2 ஆவது பிரிவின்படி, இச்சட்டத்தின் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பதவிகள் எவையும், அப்பதவி வகிப்பவர் சட்ட மன்ற உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கு அல்லது

* 1975 அக்டோபர் 25ஆம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

உறுப்பினராயிருப்பதற்கு அவரைத் தகுதியற்றவராக்காது அல்லது அவரை அவ்வாறு தகுதியற்றவராக்கியுள்ளதாக எப்போதுமே கருதப்படக்கூடாது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக இயக்குநர் பதவியும், தமிழ்நாடு சிறு தொழில் கழக இயக்குநர் பதவியும், மேற்சொன்ன விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆதாயமளிக்கும் பதவிகள் குறித்த இணைக் குழு தனது 'ஐந்தாவது மக்களவை--பத்தாவது அறிக்கையில்' செய்துள்ள பரிவுரையின் அடிப்படையில், இவ்விரு கழகங்கள் தொடர்பான பதிவுகளை மேற்படி விவர அட்டவணையிலிருந்து நீக்கிவிட அரசு முடிவு செய்துள்ளது.

இதே அறிக்கையில் மேற்படி இணைக் குழு செய்துள்ள பரிவுரையை அடிப்படையாகக் கொண்டு, மேற்சொன்ன விவர அட்டவணையில் கீழ்க்கண்ட நான்கு அமைப்புகளை சேர்த்துக் கொள்ளவும் அரசு முடிவெடுத்துள்ளது :—

1. தமிழ்நாடு உப்பு, உப்பு சார்ந்த இரசாயனப் பொருள்கள் வாரியம்.

2. கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் நூலின் ஆலைவாயில் விலையையும் கிடங்குவாயில் விலையையும் நிர்ணயிக்கும் துணைக் குழு.

3. கூட்டுறவு நூற்பாலைகள் குறித்த மாநில ஆலோசனைக் குழு.

4. குடும்ப நலத் திட்டம் குறித்த நாடகக் கதை-வசனங்களையும், கலைஞர்களையும் தெரிந்தெடுக்கும் குழு.

தமிழ்நாடு கைவினைப் பொருள்கள் வளர்ச்சிக் கழக இயக்குநர் பதவியையும் மேற்சொன்ன விவர அட்டவணையில் சேர்ப்பதென்று அரசு முடிவு செய்துள்ளது.

அதற்கேற்ப, பேரவை முன் இப்போது வைக்கப்பட்டுள்ள இச்சட்ட முன்வடிவில் இது குறித்த விதித் துறைகள் அடங்கியுள்ளன.

இத்தீர்மானத்தை ஏற்று, நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மசோதாவின் நோக்கம் இங்கே தெளிவாக எடுத்துக் கூறப்படவில்லை என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனெனில் இவ்வளவு நாள் இல்லாமல் திடீரென்று ஏன் நான்கு வாரியங்களின் தலைவர்களுக்கு இம்மாதிரி பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது என்பதை அவர்கள் தெளிவாகச் சொல்லவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனுடைய உள் நோக்கம் என்ன,—நோக்கம் என்ன என்று ஓரளவிற்குச் சொன்னார்கள்—என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், எந்தெந்த வாரியங்களை உருவாக்க முயற்சி எடுக்கிறீர்கள், சட்டமன்ற உறுப்பினர்களை அந்த வாரியங்களுக்குத் தலைவராக நியமிக்க உத்தேசம் இருக்கிறதா என்ற விவரங்களையும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மன்றத்தில் அடிக்கடி ஏற்கனவே பல பேர் சொல்லியிருக்கிறோம், 1967-க்கு முன்பு சிறிய 9 பேர் கொண்ட கேபினட்டாக இருந்தது, இப்போது 14 பேர் கொண்ட கேபினட்டாக ஆகியிருக்கிறது. அது மட்டுமல்லாமல், அந்தக் கேபினட்டுக்கு செகன்ட் கேபினட் மாதிரி, வாரியத் தலைவர்கள் உருவாக்குவதற்கு மறைமுகமாக—இதை ஒரு கேபினட் எக்ஸ்பான்ஷனுக்கு பயன்படுத்திக் கொள்கிற வகையில் செய்கிறீர்களா என்பது தெரியவில்லை.

இது innocuous சாதாரண மசோதாவாக இருந்தாலும் கூட, இதனுடைய விளைவுகள் எப்படி இருக்குமென்றால்— proliferation of a number of these Boards வாரியங்கள் ஏராளமாக உருவாகும் நிலையில் அமைச்சரின் மூலமாக எல்லாவற்றையும் நாம் தெரிந்து கொள்ள முடிவது இல்லை.

அது மட்டுமல்லாமல் இந்த வாரியங்களைப் பொறுத்தவரையில் கேள்விகள் கேட்பதற்கு சட்டசபைக்குக் கன்ட்ரோல் கிடையாது. அது வாரியமாக இருந்து, தனி அமைப்பாக இருப்பதால் பல நேரத்தில் அதனுடைய நிர்வாக நிலைமைகளை நம்மால் அறிந்து

கொள்ள முடிவது இல்லை. இங்கேயுள்ள உறுப்பினர் ஒருவர் அதற்குத் தலைவராக இருப்பார், அங்கு நடக்கும் முழு விவகாரமும் அவருக்குத் தெரியும். அமைச்சருக்குக் கூட தெரியாது.

வாட்டர் போர்ட்டை எடுத்துக் கொண்டால் மாண்புமிகு உறுப்பினர் கந்தப்பன் அவர்கள் இருக்கிறார்கள், குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அரங்கண்ணல் அவர்கள் இருக்கிறார்கள். அந்த வாரியங்களைப் பற்றிய கேள்விகள் இங்கே கேட்கப்படுகிறபோது, பதில் அமைச்சர் கொடுப்பதற்கு பதிலாக எங்கேயிருந்து வருகிறது என்றால், அமைச்சர்கள் இல்லாத இடத்தில் இருந்து வருகிறது. அந்த நிலைமை இங்கே உருவாகி இருக்கிறது என்பதை நாம் அறிவோம். பல நேரங்களில் நாம் குறைகளை எடுத்துச் சுட்டிக் காட்டியிருக்கிறோம். அப்போது எல்லாம் பதில் சொல்வது மெம்பராகத்தான் இருக்கும். இதையெல்லாம் சொல்வது 'அவுட் சைட் தி பர்வியூ ஆப் தி பில்' லாக இருக்கலாம். இருப்பினும், அந்த வாரியங்களைப் பொறுத்தவரையில், பல நேரங்களில் எப்படியெல்லாம் அங்கே ஆட்களை எம்பிளாய் செய்கிறார்கள் என்று பார்க்கிற நேரத்தில் அதிலே பல தவறுகள் நடந்து இருக்கின்றன என்பதை அறிகிறோம். அதைச் சரியான வகையில் கேட்டு, பதில் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. டெம்பாரியாக எம்பிளாய் செய்கிறார்கள். பிறகு வீட்டிற்கு அனுப்பி விடுகிறார்கள். பிறகு டெம்பாரி ஹேண்ட் என்று எடுத்து அவர்களை வைத்துக் கொண்டு விடுகிறார்கள். இப்படி வாட்டர் போர்ட்டில் ஏராளமான கம்பிளெயின்ட் இருக்கிறது. இப்படி சரியான அக்கௌண்ட்பிளிடி இல்லாமல் போய்விடக் கூடிய நிலைமை இருக்கிறது.

Whatever be the Board, it should be accountable to the Legislature. Legislature is supreme. Proliferation of the Boards இது நியாயமா, நல்லதா, அது நல்ல முறையில் அட்மினிஸ்டிரேஷன் செய்ய வாய்ப்பாக இருக்குமா என்று கேட்டு, இதன் மூலம்

1975 நவம்பர் 7] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

பல பேர் அமைச்சர்கள் என்ற முறை இல்லாமல் வாரியத் தலைவர்கள் என்று வேறு வகையில் பதவி கொடுக்கும் நிலையை உருவாக்கிக்கொள்வதற்காக உள் நோக்கமாக இது கொண்டு வரப்பட்டு இருக்கிறது என்று கூறி, இதற்கான காரணங்களை அமைச்சர் கூறினால், விரிவாக விவாதிக்க வாய்ப்பாக இருக்கும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள இந்தத் திருத்தத்தை வரவேற்று இரண்டொரு வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்:

குறிப்பாக, சட்ட மன்ற உறுப்பினர்கள் இப்போது சிறு தொழில்களில் ஈடுபட்டு இருப்பவர்கள், சிட்கோ, ஹாண்டிகிராப்ட்ஸ் போர்டு, டி.ஐ.ஐ.சி., ஆகியவற்றில் பதவி வகிக்க முடியாது என்று ஒரு தண்டனை போல் இவ்வளவு நாள் இருந்தது. சில நேரங்களில் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறவர்கள், வேறு பொறுப்புகளை வைத்து இருந்தாலும், சிறு தொழில்களை நடத்துபவர்களாக இருந்தால், அவர்கள் இந்த இடங்களில் அங்கம் வகிக்கிற நேரத்தில், அவர்கள் இந்தக் கழகங்களில் அங்கம் வகிக்கிற நேரத்தில் பல யோசனைகளை எடுத்துச் சொல்லி, அவர்களை நல்ல விதத்தில் பணியாற்றச் சொல்ல முடியும். இன்றையதினம் சிட்கோ நிறுவனம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

[பிற்பகல் 1.30]

அதில் பல பேர் கடன் வாங்குகிறார்கள். டி.ஐ.ஐ.சி. போன்ற ஸ்தாபனங்களில் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. சில பேர் அதில் சட்ட மன்ற உறுப்பினர்களாக இருக்கலாம். இருந்தாலும் அவர்களுக்கு வாய்ப்புத் தருவது நியாமானது என்ற காரணத்தால், நான் அதை வரவேற்கிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, இந்த மசோதாவிற்கு உள்நோக்கம் கிடையாது. மசோதாவில் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது.

ஒன்று, சில நிறுவனங்களில் உறுப்பினராக இருந்தால், அப்படிப் பட்டவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக நீடிக்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்றொன்று, வேறு சில நிறுவனங்களில் உறுப்பினர்களாக இருப்பவர்கள். அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக நீடிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைச் சட்ட திருத்தமாகக் கொண்டு வந்திருக்கிறோம். இது மத்திய ஜாயின்ட் செலக்ட் கமிட்டி ரிப்போர்டின் பேரில் வந்தது.

The Committee has also recommended that the Chairmanship, Secretaryship or Membership of the following bodies ought to be exempt from disqualification, since the non-official Members of these Committees either do not get any T.A., D.A., etc., or the amount of T.A., D.A. admissible to them is less than the compensatory allowance, and since the function of these bodies are mainly advisory :

Tamil Nadu State Board for Salt and Allied Chemicals.

Sub-Committee to fix ex-mill and ex-depot prices of yarn produced in Co-operative Spinning Mills.

State Level Advisory Committee for Co-operative Spinning Mills.

Committee for selecting drama scripts and troupes on family planning.

டாக்டர் ஹாண்டே அவர்கள் வாட்டர் சப்ளை போர்டு, கார்ப்பொரேஷன் பற்றியெல்லாம் சொன்னார்கள் அவைகளின் ஆண்டு அறிக்கை ஆண்டுதோறும் வைக்கப்படுகிறது. அதன் பேரில் விவாதிக்க வாய்ப்பு இருக்கிறது. அங்கே ஏதாவது தவறு நேர்ந்தால் அது வேறு பிரச்னை. இப்போது இருக்கிற பிரச்னை. அதில் இருக்கின்ற உறுப்பினர்கள் டிஸ்குவாலிபை ஆகிறார்களா இல்லையா என்பது அதைப் பொறுத்ததுதான் இந்தச் சட்டம், இந்த தேவையான சட்டத்தை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1975 நவம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, சட்டமன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, சட்டமன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்), திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/75) சட்டமாக நிறைவேற்றப் பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(5) அரசினர் தனித் தீர்மானம்

தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தை சென்னையில் அமைத்திடவும் தோல் ஏற்றுமதி மேம்பாட்டு மன்றம் கூடுதல் பொறுப்பை ஏற்க அனுமதிக்கவும் இந்திய அரசைக் கோருதல்.

* **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே,

"தமிழ்நாட்டிலிருந்து பெருமளவில் உற்பத்தியாகி ஏற்றுமதி செய்யப்படுகின்ற, வேலை நிறைவுபெற்ற, ஓரளவு வேலை நிறைவு பெற்ற தோல்களின் அளவு, அனைத்து இந்தியாவிலும் ஏற்றுமதி செய்யப்படுகின்ற தோல்களின் அளவில் 85 சதவிகிதம் ஆகும் என்பதாலும்,